031

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 04
LWU 2311 – ஒப்பந்தச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 17.03.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

பகுதி ஒன்றிலிருந்து ஒரு வினாவையும் பகுதி இரண்டிலிருந்து நான்கு வினாக்களையும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I – முகவராண்மைச் சட்டம்

இப்பகுதியில் இருந்து ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

1. (அ) முகவராண்மைச் சட்டத்தின் கீழ் "அவசியமான அதிகாரம்" என்ற கோட்பாட்டை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

   (ஆ) முகவராண்மைச் சட்டத்தின் கீழ் முரண்பாடுதடை ((docrorine of estopel) என்ற கோட்பாட்டை விளக்குக

2. (அ) "கையளிக்கப்பட்டது மீள கையளிக்கப்படலாகா" என்ற மூதுரையை முகவராண்மை சட்டத்துடன் தொடர்புறுத்தி ஆராய்க.

   (ஆ) தன்னுடைய காரை அதிகூடிய சாத்தியமான விலையில் விற்கும் பொருட்டு சரத் "ஒலிம்பியா மோட்டார்ஸ்" எனப்படும் விசேட கார் விற்பனை நிறுவனம் ஒன்றினை ஈடுபடுத்தினான். சரத்திற்கு தெரியாமல் "ஒலிம்பியா மோட்டர்ஸ்"நிமால் எனப்படும் தகுதியற்ற தரகரிடம் இவ்வேலையை ஒப்படைத்தது. நிமால் பொருத்தமான வாங்குனர் ஒருவரை கண்டுபிடிக்காத காரணத்தால் கார் பின்னர் நட்டத்தில் விற்பனை செய்யப்பட்டது.

   சரத்திற்கு ஆலோசனை வழங்குக.

3. வெளிப்படுத்தப்பட்ட முதல்வர், வெளிப்படுத்தப்படாத முதல்வர் என்றகோட்பாடுகளை வேறுபடுத்துவதன் மூலம் மூன்றாம் கட்சிகாரர் தொடர்பில் முதல்வர் ஒருவருக்கு இருக்கக்கூடிய உரிமைகளை விளக்குக.

## பகுதி II ஒப்பந்தச் சட்டம்

இப்பகுதியில் இருந்து நான்கு வினாக்களுக்கு விடை தருக.

4. ஒவ்வொரு தொன் மா - ரூபா 5,000/= படி 200 தொன் கோதுமை மாவை விற்பனை செய்வதற்கு குணபால. ஜினசேன விற்கு கொடைமுனைவொன்றை புதன்கிழமை செய்தான். ஜினசேனவிற்கான கொடைமுனைவு பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தது.

   "இன்று நண்பகல் தொலைபேசியில் ஏற்பை தெரியப்படுத்தவும்." ஜினசேன தன்னுடைய ஏற்பை காலை 10.00 மணிக்கு பக்ஸ் மூலம் தெரியப்படுத்தினான். குணபாலவை இந்த பக்ஸ் செய்தி சரியாக சென்று அடைந்துள்ளமை பக்ஸ் இயந்திரம் இலிகிதருக்கு காட்டிய போதிலும், துரதிஷ்டவசமாக பக்ஸ்

இயந்திரத்தில் புதிய அச்சு கார்ட்ரிஜ் ஒன்று பொருத்தப்பட்டிருக்காத காரணத்தினால் ஏற்பு குணபாலாவினால் பெற்றுக் கொள்ளப்படவில்லை. தனக்கும் குணபாலாவுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம், வருகிற திங்கட் கிழமை, விநியோகிக்கப்படக்கூடிய கோதுமை மாவை நம்பி, ஜினசேன 10,000 இறாத்தல் பாண்களை விநியோகம் செய்வதற்கான பிணிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் தனபாலவுடன் ஈடுபட்டான்.

குணபாலவுடன் பிணிக்கும் ஒப்பந்தம் ஒன்று உள்ளதா என்பது தொடர்பில் ஜினசேனவிற்கு ஆலோசனை வழங்குக.

பின்வரும் சூழ்நிலைகளின் கீழ் உமது ஆலோசனை வேறுபடுமா?

(அ) ஜினசேன இவ்வேற்பை இரத்துச் செய்த-செய்தியை நண்பகலுக்கு முன்னர் பகஸ் செய்திருந்து, குணபாலவுடைய பக்ஸ் இயந்திரம் சரியாக தொழிற்பட்டிருந்தால்;

(ஆ) ஜினசேன குணபாலாவுக்கு தனது ஏற்பை பின்னேரம் தொலைபேசியில் தெரிவித்திருந்தால்

(இ) தொலைபேசி ஏற்புக்கு பதிலாக "உமது ஏற்பை பதிவு தபாலில் நண்பகலுக்கு முன்னர் அனுப்பவும்" என குணபால முனைவில் குறிப்பிட்டிருந்தால்

ஜினசேன ஏற்பு கடிதத்தை நண்பகலுக்கு முன்னர் சாதாரண தபாலில் அனுப்பியிருந்து அக்கடிதம் குணபாலவை சென்றடையாத விடத்து.

5. குற்றமற்ற பிறழ்பகர்வு, மோசடியான பிறழ்பகர்வு ஆகிய கோட்பாடுகளை விளக்கி, இவ் ஒவ்வொரு பிறழ்பகர்வினால் பாதிப்படைந்த கட்சிகாரருக்கு காணப்படக்கூடிய பரிகாரங்களை தீர்ப்புச் சட்டங்களுடன் விளக்குக.

6. சட்டமுரணானதன்மையால் ஏற்படும் விளைவுகளுடன் தொடர்புபட்ட கொள்கையானது இரண்டு இலத்தின் மூதுரைகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவையாவன 'இழியேதுவால் வழக்கெழாது', இது குறிப்படுவதாவது எந்தவொரு சட்டமுரணான கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் வழக்கு நடவடிக்கை ஒன்று கொண்டு வரப்பட முடியாது. மற்றையது "ஒத்த தீமையில் எதிராளியின் நிலைமை வலிது", இதன் மூலம் குறிப்பிடுவதாவது குற்றம் சமமாக இருக்கும் போது எதிராளியின் நிலைமை மேலோங்கும் என்பதாகும் .

விளக்குக.

7. குறைபாடுடைய நிறைவேற்றலுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளின் கடினத் தன்மையை தணிப்பதற்கு நீதி மன்றங்களினால் தாபிக்கப்பட்டுள்ள விதிகளை விமரிசித்து ஆராய்க.

8. நிலைகுலைவு என்ற கோட்பாட்டின் கீழ் விடுவித்தல் என்பது, ஒப்பந்தம் ஒன்றில் உள்ள மேலதிக கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாதவாறு அக்கட்டுப்பாடுகளி சில அசாதாரண மற்றும் புறக்காரணிகளால், இரண்டு கட்சி காரரும் பொறுப்பாக்கப்பட முடியாத போது, ஒப்பந்தம் ஒன்று முடிவுக்கு கொண்டு வரப்படுவதுடன், கட்சிகாரர்கள் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

இக்கோட்பாட்டின் பின்னணியில் காணப்படும் கொள்கைகளையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் கொண்டு இக் கூற்றினை ஆராய்க.

9. (அ) "வாழ்காலத்தின் போது கொடையாளியினால் அளிக்கப்பட்ட (வாழ்வாரிடை கொடை) கொடையானது கைமீட்க முடியாத போதிலும், கொடையாளி சில விசேட சூழ்நிலைகளின் கீழ், அத்தகைய கொடை ஒன்றை நீதிமன்ற கட்டளையொன்றின் மூலம் புறத்தொதுக்கலாம்."

ஆராய்க.

(ஆ) "சாவேது கொடை, ஒப்பந்தம், விருப்பாவணம் பொருள்(Legacy) ஆகிய இரண்டினுடைய பண்புகளை கொண்ட விசேட வகையான கொடை ஒன்றாகும்."

ஆராய்க.

10. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு பற்றி குறிப்பெழுதுக.

(அ) தகாத செல்வாக்கு

(ஆ) பிழையாக கையொப்பமிடப்பட்ட ஆவணங்களும் என் செயலல்ல வாதமும்.

(இ) விடுவித்தல்

(ஈ) புதுக்கல்

(உ) திரவதன்மையான நட்டங்களும் தண்டப்பணங்களும்

(பதிப்புரிமையுடையது)

UNIVERSITY OF SRI LANKA LIBRARY